


முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.6.2023) சென்னை, எழிலகத்தில் உள்ள வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு நேரில் சென்று, ஒடிசா இரயில் விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களை தொடர்பு கொள்வதற்கும், அவர்களுக்குத் தேவையான உதவிகளை செய்வதற்கும், மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, வருவாய் நிர்வாக ஆணையர் / கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கே.பிரபாகர், காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ. சைலேந்திரபாபு, பொதுத்துறை செயலாளர் (பொறுப்பு) முனைவர் டி. ஜகந்நாதன், பேரிடர் மேலாண்மைத் துறை இயக்குநர் எஸ்.ஏ. ராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.6.2023) சென்னை, சென்ட்ரலில் உள்ள தெற்கு இரயில்வே தலைமை கட்டுப்பாட்டு அறைக்கு நேரில் சென்று, ஒடிசா இரயில் விபத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த தமிழ்நாட்டினர் பற்றிய விவரங்களையும், அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்புப் பணிகள் குறித்த விவரங்களையும் இரயில்வே உயர் அலுவலர்களுடன் கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ.சைலேந்திரபாபு, பொதுத்துறை செயலாளர் (பொறுப்பு) முனைவர் டி. ஜகந்நாதன், தெற்கு இரயில்வே மண்டல துணை மேலாளர் கணேசன், துணை மேலாளர் (வணிகம்) அஸ்வின் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## ஒடிசாவில் கோர ரயில் விபத்து!

# தமிழ்நாட்டைச் சேர்ந்த பலியானோர் குடும்பங்களுக்கு தலா ரூ.5 லட்சம் நிதி!

## முழு வீச்சில் நிவாரண நடவடிக்கைகள்! முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**சென்னை, ஜூன் 4-**

**ஒடிசா இரயில் விபத்து தொடர்பாக சென்னை சென்ட்ரல் தெற்கு இரயில்வே தலைமை கட்டுப்பாட்டு அறை மற்றும் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் ஆய்வு - மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் மேற்கொள்ள கூடுதல் அதிகாரிகள் நியமனம் தமிழ்நாட்டைச் சேர்ந்த உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா ரூ.5 இலட்சம் மற்றும் காயமடைந்தவர்களுக்கு தலா ரூ.1 இலட்சம் நிதியினை முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.6.2023) சென்னை, சென்ட்ரலில் உள்ள தெற்கு இரயில்வே தலைமை கட்டுப்பாட்டு அறைக்கு நேரில் சென்று, ஒடிசா இரயில் விபத்தில் உயிரிழந்த மற்றும் காயமடைந்த தமிழ்நாட்டினர் பற்றிய விவரங்களையும், அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்புப் பணிகள் குறித்தும் இரயில்வே உயர் அலுவலர்களுடன் கேட்டறிந்தார்.

அதனைத் தொடர்ந்து, சென்னை சென்ட்ரலில் உள்ள பயணிகள் விசாரணை மற்றும் உதவி மையத்திற்கு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று, உதவி மையத்தில் விபத்து குறித்து பெறப்பட்ட அழைப்புகள் தொடர்பாகவும் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார்.

மேலும், இரயில்வே கட்டுப்பாட்டு அறையில் தமிழ்நாடு அரசின் சார்பில் மாவட்ட வருவாய் அலுவலர் ஒருவரும், காவல்துறை உயர் அலுவலர் ஒருவரும் நியமிக்கப்பட்டு, அவர்கள் கட்டுப்பாட்டு அறைக்கு வரும் தகவல்களை சேகரித்து, தொடர் நடவடிக்கை எடுப்பதற்கு ஒடிசா மற்றும் தமிழ்நாடு அரசுகளுக்கு உதவிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**ஒடிசா தலைமைச் செயலாளரிடம் தொலைபேசியில் கேட்டறிந்தார்!**

தொடர்ந்து, சென்னை, எழிலகத்தில் உள்ள வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறையின் மாநில அவசரகால செயல்பாட்டு மையத்திற்கு முதலமைச்சர் அவர்கள் நேரில் சென்று, அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்து ஆய்வு செய்தார். பின்னர், கட்டுப்பாட்டு மையத்திலிருந்து தொலைபேசி வாயிலாக ஒடிசா மாநில தலைமைச் செயலாளர் அவர்களை தொடர்பு கொண்டு அங்கு மேற்கொள்ளப்பட்டு வரும் மீட்புப் பணி நடவடிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.6.2023) சென்னை சென்ட்ரலில் உள்ள பயணிகள் விசாரணை மற்றும் உதவி மையத்திற்கு நேரில் சென்று, ஒடிசா இரயில் விபத்து குறித்து பெறப்பட்ட அழைப்புகளின் விவரங்கள் குறித்தும், அது தொடர்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகள் குறித்தும் கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, காவல்துறை தலைமை இயக்குநர் முனைவர் செ. சைலேந்திரபாபு, பொதுத்துறை செயலாளர் (பொறுப்பு) முனைவர் டி. ஜகந்நாதன், தெற்கு இரயில்வே உயர் அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**பேட்டி!**

அதனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு:-

நேற்றிரவு கொல்கத்தாவிலிருந்து சென்னை நோக்கி வந்து கொண்டிருந்த கோரமண்டல் எக்ஸ்பிரஸ், பெங்களூரு ஹவுரா அதிவிரைவு எக்ஸ்பிரஸ் ரயில் மற்றும் ஒரு சரக்கு ரயில் மூன்றும் ஒடிசா மாநிலத்தில் பயங்கர விபத்திற்குள்ளாகி 230க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என்ற செய்தி வந்திருக்கிறது. நூற்றுக்கணக்கானோர் காயமடைந்து, ஆங்காங்கு இருக்கக் கூடிய மருத்துவமனை களில் அனுமதிக்கப்பட்டு இருக்கிறார்கள்.

நம் அனைவருக்கும் ஆழ்ந்த துயரத்தையும் வேதனையையும் அளித்துள்ள இந்த பயங்கரமான விபத்து, நாட்டையும் நாட்டு மக்களையும் பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது.

இந்த விபத்து குறித்து கேள்விப்பட்டவுடன் நான் உடனடியாக நேற்று இரவு ஒடிசா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக் அவர்களுடன் தொலைபேசியில் பேசினேன். இது குறித்து என்னுடைய ஆழ்ந்த வருத்தத்தையும் வேதனையையும் அவரிடம் தெரிவித்துக் கொண்டு, அங்கு மீட்பு பணியில் ஏதேனும் உதவி தேவைப்பட்டால் தமிழ்நாடு அரசு சார்பில் அதை செய்ய தயாராக இருக்கிறோம் என்று தெரிவித்தேன்.

**அமைச்சர்கள் உதயநிதி ஸ்டாலின் சிவசங்கர் விரைந்தனர்**

மேலும், தமிழ்நாடு இளைஞர் நலம் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும், போக்குவரத்து துறை அமைச்சர் சிவசங்கர் அவர்களும், போக்குவரத்து துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பணீந்திர ரெட்டி, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த் மற்றும் திருமதி அர்ச்சனா பட்நாயக் ஆகியோர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

அதுமட்டுமல்லாமல், விபத்து நடந்த பாலசோர் பகுதியிலேயே அடுத்த நான்கு அல்லது ஐந்து தினங்கள் தங்கி இருந்து மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை தொடர்ந்து ஒருங்கிணைத்து அங்கு பாதிக்கப்பட்டிருக்கக்கூடிய தமிழர்களுக்கு தேவையான உதவிகளை செய்ய இந்திய ஆட்சிப் பணி அலுவலர்கள், இந்திய காவல் பணி அதிகாரிகள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்கள் ஆகியோரும் அனுப்பி வைக்கப்படுகின்றனர்.

அங்குள்ள காவல்துறையினருடன் இணைந்து பணிகளை மேற்கொள்ள தமிழகத்தைச் சேர்ந்த கூடுதல் காவல்துறை இயக்குநர் சந்தீப் மிட்டல், அனுப்பி வைக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே விபத்து குறித்து பொதுமக்களுக்கு தகவல் அளிக்க மாநில அரசின் கட்டுப்பாட்டு அறைகள் நேற்று இரவு முதல் துவங்கி அது செயல்பட்டு கொண்டிருக்கிறது.

**பாதிக்கப்பட்டவர்களை அழைத்துவர சிறப்பு ஏற்பாடு!**

நான் தற்போது தென்னக இரயில்வேயின் கட்டுப்பாட்டு அறைக்கு சென்று அங்கு விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களை தொடர்பு கொள்வதற்கும், அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்வதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து கேட்டு அறிந்து கொண்டேன். இந்த விபத்தில் பாதிக்கப்பட்டு தமிழ்நாடு வந்து சேர முடியாதவர்களையும், பல இரயில் சேவைகள் ரத்து செய்யப்பட்டதால் விபத்து நடந்த இடத்திலிருந்து சென்னைக்கு திரும்ப இயலாதவர்களையும் அழைத்து வருவதற்கு சிறப்பு இரயில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவையான மருத்துவ சிகிச்சை அளிக்கவும், உயிரிழந்தவர்களின் உடல்களை கொண்டு வருவதற்கும் தமிழ்நாடு அரசு எல்லா ஏற்பாடுகளையும் செய்து வருகின்றது. விபத்து குறித்த தகவல்களை தெரிந்து கொள்வதற்கு மாநில கட்டுப்பாட்டு செல்போன் எண். 94458 69843 தொலைபேசி எண். 1070 வாட்ஸ்அப் எண். 94458 69848 ஆகிய எண்களை பொதுமக்கள் தொடர்பு கொள்ளலாம் என்று தெரிவித்துக் கொள்ளப்பட்டு இருக்கிறது.

## காயமடைந்தோருக்கு தலா ரூ.1 லட்சம் நிதி!

தொடர்ச்சி 4 ஆம் பக்கம்

---

## ஒடிசா ரயில் விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி மற்றும் மீட்புப் பணிகள்!

# அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் - ஒடிசா மாநிலம் பாலசோர் சென்றார்!

## மீட்புப் பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை!

**புவனேஷ்வர், ஜூன் 4-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, மீட்புக் குழு ஒடிசா மாநிலத்தின் பாலசோர் மற்றும் புவனேஷ்வரில் உள்ள பேரிடர் கட்டுப்பாட்டு அறைக்கு விரைந்தனர். மீட்புப் பணிகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.**

அதன் விபரம் வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் ஒடிசா மாநிலத்தில் ஏற்பட்ட இரயில் விபத்தில் பாதிக்கப்பட்ட தமிழ்நாட்டைச் சேர்ந்த மக்களுக்கு நிவாரணப் பணிகளை மேற்கொள்ள தேவையான நடவடிக்கைகளை போர்க்கால அடிப்படையில் மேற்கொண்டு வருகிறார்.





விபத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான மருத்துவம் மற்றும் இதர உதவிகளைச் செய்திடவும் மேலும், மீட்புப் பணிகளில் உடனிருந்து தமிழ்நாட்டைச் சேர்ந்த விபத்தில் காயமடைந்த மற்றும் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கும், உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கும் தேவையான உதவிகளைச் செய்திடவும் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பணீந்திர ரெட்டி,வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜயந்த், மற்றும் ஆசிரியர் தேர்வாணையக் குழுவின் தலைவர் திருமதி அர்ச்சனா பட்நாயக், ஆகியோர் கொண்ட குழு ஒன்றினையும் உடனடியாக அனுப்பி வைத்தார்.

அவர்கள் நேற்று (3.6.2023) காலை ஒடிசா மாநிலத்திற்கு விமானம் மூலம் சென்றடைந்தனர்.

அங்கிருந்து அமைச்சர்கள் மற்றும் போக்குவரத்துத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் ஆகியோர் விபத்து நடந்த பாலசோர் என்ற இடத்திற்கு அரசு ஹெலிகாப்டர் மூலம் விரைந்துள்ளனர்.

மற்றொரு குழுவான வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், ஆசிரியர் தேர்வாணையக் குழுவின் தலைவர் ஆகியோர் ஒடிசாவில் இதற்கென பிரத்யேகமாக அமைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறைக்கு சென்றுள்ளனர்.

**உடனுக்குடன் தமிழக அரசுக்குத் தகவல்!**

அமைச்சர் பெருமக்களைக் கொண்ட குழு விபத்து நடந்த இடத்தில் உள்ள நிலவரங்களையும், மேற்கொள்ளப்பட்டு வரும் நிவாரணப் பணிகளையும் மேலும் கட்டுப்பாட்டு அறையில் உள்ள குழுவினர் விபத்து நடந்த இடத்தில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களின் விபரங்கள் குறித்து உடனுக்குடன் தமிழ்நாடு அரசிற்குத் தெரிவிப்பார்கள். அதனடிப்படையில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.